[3rd April 1965

இரண்டும் அநேகமாக சர்க்கார் பொறுப்பில் உள்ளவைதான். அப்படியிருக்க, மின்சாரக் குழுவிலேயே அவர்களை நிரந்தரமாக மாற்றிவிடக் கூடாதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்தப் பதிலை நான் பார்த்ததற்குப் பிறகு, என்னுடைய மனதிலும் அது போன்ற எண்ணம் தான் தோன்றி, "மின்சாரக் குழுவிலேயே அவர்களுடைய சர்விசை ஏன் நிரந்தரமாக்கக் கூடாது?" என்று எழுதிக் கேட்டிருக்கிறேன். இது விஷயமாக மின்சார போர்டோடு கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. 'லீன்' ஐ நீடிக்காமல் இருக்க என்ன செய்வது என்பது பற்றியும் யோசிக்கலாம்.

திரு. வை. சங்கரன்: எவ்வளவு காலத்திற்குள் பாக்கி உள்ளவர்கள் காயப்படுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கலாம் ?

கனம் திரு. வெ. ராமைய்யா: எலெக்ட்ரிகல் என்ஜினியர் டிவிஷனுக்கும் எலெக்ட்ரிசிடி போர்டுக்கும் இருக்கும் கரெஸ்பான்டென்ஸ் விரைவில் முடியும் என்று எதிர்பார்க்கிறேன். கரெஸ்பாண்டென்ஸ் முடிவடைந்தவுடனே நிரந்தரமாக்குவதற்கு வேண்டிய முடிவுகள் விரைவில் ஏற்படும்.

திரு. எஸ். ஜெ. ராமசாமி: தலைவர் அவர்களே, 'காயம்', 'காயம்' என்று அமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று முறை குறிப்பிட்டார்கள். இந்தி வந்தால் தமிழ் கெடும் என்று சொல்கிறார்கள். 'காயம்' என்ற வார்த்தை எப்படி வந்ததோ, அதுபோல் இதுவும் சிதறப் போகிறது என்று இதிலிருந்து அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்வாரா ?

(பதில் இல்லை)

திரு. மீ. கலியாணசுந்தரம்: பத்து தற்காலிகக் குமாஸ்தாக்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்களைக் காயம் செய்கிற சமயத்தில், அவர்கள் எந்தத் தேதியில் இந்தப் பதவிக்கு வந்தார்களோ அந்தத் தேதியிலிருந்து காயம் செய்து, அனுகூலங்கள் கிடைக்க உத்தரவிடுவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா: இவர்களைப் 'பர்மனென்ட்' ஆக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை இது.

Rice sales by private shops under the family card system

*428 Q.—Sri RAMA ARANGANNAL: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the number of private shops permitted to sell rice under the family card system in Madras City; and

(b) the basis on which these shops have been authorised to sell rice?

3rd April 1965]

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 868.

(*b*) These shops have been licensed generally taking into consideration the following criteria—

(i) whether the applicant is a new dealer or an established dealer who, for certain genuine reasons, failed to submit his application in time.

(ii) if an old dealer, his standing in the trade and his general reputation for being entrusted with a licence.

(iii) if a new dealer, the need for licensing more dealers in the locality, and how far this particular applicant deserves to be given a license.

(iv) The previous record of the applicant in the foodgrain trade or in any other connected trade is either particularly desirable or undesirable for being given a licence now.

(v) The prospects of the applicants handling of foodgrains exceeding the exemption limit.

(vi) Any other special circumstances affecting the case.

(vii) When any particular division is found not covered by sufficient number of licenses, new licenses have been granted without rigidly following the above criteria.

திரு. இராம. அரங்கண்ணல் : *தலைவர் அவர்களே, ஒவ்வொரு கடைக்கும் எத்தனை கார்டுகள் என்று நிர்ணயம் செய்து உத்தர விடப்பட்டிருக்கிறது ?*

கனம் திரு. வெ. ராமையா : *இப்பொழுது நான் கடைசியாக எடுத்த முடிவு ஒரு கடைக்கு ஏறத்தாழ 450 இலிருந்து 500 கார்டு கள் வரைக்கும் இருக்க வேண்டும் என்பது.*

திரு. எம். எஸ். மணி : *அரிசிக் கடை வைக்க அனுமதிக்கப்பட்ட வர்கள் பல பேர் முன் அனுபவம் இல்லாதவர்கள். முன் அனுபவம் இருந்தவர்கள் ஏராளமானவர்கள் இருக்க, முன் அனுபவம் இல்லாதவர்கள் அனுமதிக்கப்படக் காரணம் என்ன ?*

கனம் திரு. வெ. ராமையா : *இப்பொழுது சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் அந்தத் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கெல்லாம் அநேகமாகக் கிடைத்திருப்பதாகத்தான் தெரிவித்தார்கள்.*

திரு. இரா. நெடுஞ்செழியன் : *கனம் அவைத்தலைவர் அவர்களே, அவ்வாறு தனிப்பட்டவர்களுடைய கடைகளுக்கும் கூட்டுறவுக் கடைகளுக்கும் கார்டுகள் வழங்குவதில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா? அல்லது ஒரேயடியாகவே வழங்கப்படுகின்றனவா?*

கனம் திரு. வெ. ராமையா : *நான் இதைத் திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. ஆனால், பொதுவாக, 450-லிருந்து 500 கார்டு வரைக்கும் இருக்க வேண்டும் என்பது. கூட்டுறவுப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் தான் அத்தனை பேரும். அதே*

இடத்தில் இருக்கவேண்டுமென்றால், அதை வற்புறுத்தவில்லையா என்று தெரியவில்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. இராம அரங்கண்ணல்: பாமிலி கார்டுகளுக்கு உணவு தானியம் வழங்க லைசென்ஸ் பெற்ற வியாபாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இதற்குக் கார்டு வழங்காமல் இருக்கிறது. 500, 400 கார்டுகளாகக் குறைத்து வழங்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா: எல்லோருக்கும் வழங்குவதில் சிரமம் இருக்காது. அதில் கஷ்டமே கிடையாது. கொத்தவால் சாவடியில் உள்ள லைசென்ஸ் பெற்றவர்களுக்கு மட்டும் வழங்குவது என்றால் தான் ஜனங்களுக்குச் சிரமமாக இருக்கும். ஆகவே தான் டிவிஷன் வாரியாக ஜனங்களுக்கு எல்லா இடங்களிலும் கிடைக்கும் படியான ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். பொதுமக்களுடைய நன்மையைத் தான் நாம் கருதிப் பார்க்கவேண்டும். ஆகவே தான் லைசென்ஸ் கொடுத்திருக்கக் கூடியவர்களுக்கு மட்டும் கொடுக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ள முடியாது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: தானியங்கள் கொள்முதல் செய்வதற்குப் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு சொசைடிகள் இருக்கின்றன, அவர்களுக்குக் கொடுத்து அவர்கள் மூலமாக விநியோகம் செய்ய ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: சென்னை நகரைப் பொறுத்த வரையில் எல்லாம் கொடுத்திருக்கிறோம்.

Krishnagiri Reservoir water for second crop

* 429 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to let out water from the Krishnagiri Reservoir for a second crop; and

(*b*) if so, the details therof?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes.

(*b*) Supplies have been allowed for raising a short term second crop in 8,850.95 acres under the left and right side Main Canals of Krishnagiri Reservoir Project for 100 days from 1—1—1965 to 10—4—1965.

திரு. வை. சங்கரன்: பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர், டாமில் எவ்வளவு இருந்தால் எவ்வளவு விடுவது என்பதற்கு விதி முறைகள் வைத்துக் கொண்டு விடுகிறார்களா? அதன்படி இப்போது விடப்படுகிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்த வருஷம் வரைக்கும் அது மாதிரியான விதிமுறைகளை வைத்துக்கொண்டு தான் தண்ணீர்